DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE,
NAGAPATTINAM

**அமர்வு வழக்கு எண். 185 /2022**

**Deposition of witness for prosecution : PW- 4 (LW 5)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **ராஜா செல்வம்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 23.11.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யத்தில் வசித்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1,ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.11.2020 அன்று காலை 8.30 மணியளவில் குமரவேலவன் அம்மா என்னிடம் துணி தைக்க கொடுத்திருந்தார்கள். அதை தைத்து க்கொண்டு துணியைக்கொடுப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். அவரது வீட்டில் உள்ளவர்கள் குமரவேல் அவர் வயலுக்கு சென்றிருப்பதாக சொன்னார்கள். குமரவேலவனின் வீட்டில் உள்ளவர்கள் காத்திருங்கள் என்று சொன்னதால் நான் அவர் வீட்டில் காத்திருந்தேன். அப்போது குமரவேலின் வீட்டிற்கு அழகன் என்பவர் வந்தார். அப்போது காத்துக்கொண்டு இருந்த என்னை அழகன் என்பவர் வயலுக்க போய் பார்த்துவிட்டு வருவோம் என்று அழைத்தார். உடனே நானும், அழகனும் வயலுக்கு சென்றோம். நாங்கள் போய்க்கொண்டு இருக்கும்போது வயலில் சத்தம் கேட்டது. அப்போது தேவடியா மகனே, குச்சிக்காரி மகனே என்று திட்டிக்கொண்டு அன்பழகன் என்பவர் ஓடிவந்தார். அப்போது அன்பழகன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வயலில் இருந்த குமரவேலவனின் தலையில் அருவாளால் இத்தோடு ஒழிந்தாயடா என்று சொல்லி வெட்டினார். அப்போது வயலில் இருந்து பனங்கொட்டைகளை எடுத்துக்கொண்டிருந்த குமரவேல் தலைக்கு வந்த வெட்டை குமரவேல் இரண்டு கைகளாலும் தடுத்தார், அப்போது குமரவேலவனின் இடது கையின் ஆட்காட்டி விரலுக்கும், கட்டை விரலுக்கும் இடையில் வெட்டு விழுந்து

விட்டது. மீண்டும் குமரவேலவனின் தலையில் அன்பழகன் வெட்டினார். அப்போது குமரவேலின் வலது கையை அன்பழகன் பிடித்துக்கொண்டார். அப்போது அந்த இடத்திற்கு குமரவேலின் அம்மாவும் ஓடிவந்தார்கள். ஐயோ பாவி என் மகனை விடுடா என்று சொல்லி ஓடிவந்தார்கள். வெட்டிய அன்பழகன் கையில் கத்தியை எடுத்துக்கொண்டு உன் சாவு என் கையில்தாண்டா என்று சொல்லிக்கொண்டு ஓடிவிட்டார். அதன் பின்னர் குமரவேவலவனின் கையில் ரத்தம் பீறிட்டு வந்தது. அதன் பிறகு அவரை கைத்தாங்கலாக வீட்டிற்கு அருகில் அழைத்து வந்தோம். மருத்துவமனைக்கு குமரவேலவனை அழைத்து செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்ததும் குமரவேலவன் மயக்கம் வருகிறது என்று சொன்னார். உடனே குமரவேலை பைக்கில் இருந்து கைத்தாங்கலாக கீழே இறக்கி 108 ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் ஏற்றி வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம், அங்கு குமரவேலவனை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு கையில் நரம்பு கட் ஆகியுள்ளது என்றும், மேல் சிகிச்சைக்கு திருவாரூர் அல்லது தஞ்சாவூர் அழைத்து செல்ல சொன்னார்கள். அப்போது வேதாரண்யம் மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள். விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதன்பேரில் தஞ்சாவூரில் உள்ள கேஜி தனியார் மருத்துமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம்,. அதன் பின்னர் போலீசார் என்னை விசாரித்தபோது நடந்த விவரங்களைத்தான் கூறினேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை** - இல்லை

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE,
NAGAPATTINAM

**அமர்வு வழக்கு எண். 185 /2022**

**Deposition of witness for prosecution : PW- 3 (LW 4)**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **அழகன்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 23.11.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யத்தில் வசித்து சர்வேயராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வேதாரண்யத்தில் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1,ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.11.2020 அன்று காலை 8.30 மணியளவில் குமரவேலவன் வீட்டிற்கு சென்றிருந்தேன். அங்கு ராஜா செல்வம் என்பவர் வந்திருந்தார். குமரவேலன் எங்கு என்று விசாரித்தேன், அவர் வயலுக்கு சென்றிருப்பதாக சொன்னார்கள். நானும், ராஜாசெல்வமும் வயலுக்கு சென்றோம். அப்போது தேவடியா மகனே, குச்சிக்காரி மகனே என்று திட்டிக்கொண்டு அன்பழகன் என்பவர் வயலில் இருந்த குமரவேலின் தலையில் அருவாளால் இத்தோடு ஒழிந்தாயடா என்று சொல்லி வெட்டினார். அப்போது குமரவேல் தலைக்கு வந்த வெட்டை குமரவேல் இரண்டு கைகளாலும் தடுத்தார், அப்போது குமரவேலவனின் இடது கையின் ஆட்காட்டி விரலுக்கும், கட்டை விரலுக்கும் இடையில் வெட்டு விழுந்து விட்டது. இதைப்பார்த்து நாங்கள் குமரவேலவன் இருக்கும் இடம் நோக்கி ஓடினோம். மீண்டும் குமரவேலை அன்பழகனை வெட்டினார். வெட்டும்போது அன்பழகன் வலது கையை குமரவேல் பிடித்து க்கொண்டார். அப்போது மரமர என்று அன்பழகன் குமரவேலின் கையை கடித்தார். அப்போது அன்பழகன் கத்தியை எடுத்துக்கொண்டு உன் சாவு என் கையில்தான் என்று சொல்லிக்கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார். அதன் பின்னர் குமரவேலவனின் கையில் ரத்தம் பீறிட்டு வந்தது. அதன் பிறகு அவரை

கைத்தாங்கலாக வீட்டிற்கு அருகில் அழைத்து வந்தோம். மருத்துவமனைக்கு குமரவேலவனை அழைத்து செல்வதற்காக ராஜா செல்வத்தின் இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்ததும் குமரவேலவன் மயக்கம் வருகிறது என்று சொன்னார். உடனே குமரவேலவனை பைக்கில் இருந்து கீழே இறக்கி 108 ஆம்புலன்ஸ் வந்ததும் அதில் ஏற்றி வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம், அங்கு குமரவேலை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு நரம்பு கட் ஆகியுள்ளது என்றும், மேல் சிகிச்சைக்கு தஞ்சாவூர் அழைத்து செல்ல சொன்னார்கள். அதன்பேரில் தஞ்சாவூரில் உள்ள கேஜி மருத்துமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம்,. போலீசார் என்னை விசாரித்தபோது இந்த விவரங்களைத்தான் கூறினேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை** - இல்லை